**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.52/2023** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W. 9** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| **Name :** | சரவணன் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **30.01.2026**

**எதிரிகள் ஆஜரில்லை. பிடிக்கட்டளை நிலுவை.**

**முதல் விசாரணை**

நான் தற்போது குரும்பலூர் பகுதி வருவாய் ஆய்வளாராக பணிபுரிகிறேன். கடந்த 21.12.2014ம் தேதி பெரம்பலூர் வட்டம், எளம்பலூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணியில் இருந்தபோது வாலிகண்டபுரம் பாஷா லேத்தில் போலி மதுபானம் தயாரித்தது சம்மந்தமாக குற்றவாளியிடம் ஒப்புதல்வாக்குமூலம் பதிவுசெய்துள்ளது வேண்டி உள்ளது என்றும், அதுசம்மந்தமாக மதுவிலக்கு காவல்நிலையம் வரசொல்லி போலிசார் அழைத்தார்கள். அதன்பிறகு நானும், என்னுடைய கிராமஉதவியாளர் அன்பழகனும் காவல்நிலையம் சென்றோம். அங்கு போலிசார் கஷ்டடியில் எடுத்திருந்த ராமகிருஷ்ணன் என்பவரை போலிசார் விசாரித்தார்கள். அவர் சொந்த ஊர் திருவாரூர் மாவட்டத்தில் உள்ளது என்றும் மற்றும் குடும்ப விவரங்களை சொல்லிவிட்டு பாஷா லேத்திற்கு பெயிண்டிங் வேலைக்கு சென்றதாக சொன்னார். அந்த லேத்தில் வேலைபார்க்கும்போது வாகனங்களுக்கு நெம்பர் பிளேட் மாற்றுவது மற்றும் அந்த லேத்தில் உள்ளகீற்று கொட்டகையில் போலிலேபிள், பாட்டில்

வைத்துக்கொண்டு மதுபானம் தயாரிக்கப்பட்டதாக கூறினார். மேற்படி ராமகிருஷ்ணன் தன்னுடையபெயரை வெற்றிவேல் என்று மாற்றி போலியான ஓட்டுநர் உரிமம் சென்னை முகவரியை காண்பித்து பெற்றிருப்பதாகவும், தன்னை அழைத்து சென்றால் அந்த ஓட்டுநர் உரிமத்தை எடுத்து தருவதாக சொன்னார். அதன்பேரில் அவரை பாஷா லேத்திற்கு அழைத்துசென்றபோது அவர் இரண்டு ஓட்டுநர் உரிமத்தை எடுத்து ஆஜர் படுத்தியதை கைப்பற்றுதல் மகசரில் போலிசார் கைப்பற்றியதில் நாங்கள் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் எதிரிகள் ராமகிருஷ்ணன் ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் மகசரில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.18, கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.19, இதுசம்மந்தமாக நான் போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் கையெழுத்து செய்தேன்.

18.03.2015ம் தேதி எதிரி சுரேஷ் என்பவரை பாஷா லேத்தில் மதுபானம் தயாரித்தது சம்மந்தமாக ஒப்புதல்வாக்குமூலம் பெறவேண்டியுள்ளது என்றுபோலிசார் அழைத்ததின் பேரில் நானும், என்கிராமஉதவியாளரும் காலை 09.00 மணிக்கு காவல்நிலையம் சென்றோம். காவல்நிலையத்தில் எதிரி சுரேஷ் தன்னுடைய குடும்ப பிண்ணனி மற்றும்தான் வேலைபார்த்த விவரங்களை விவரமாக சொன்னார். அதன்பிறகு பெரம்பலூர் வாலிகண்டபுரத்தில் இடத்தை வாடகைக்கு எடுத்து லேத் வைத்திருந்து அங்கு போலி மதுபானம் தயாரித்தாக சொன்னார். கிடைக்கும் இடத்தில் அதற்கான வண்டியை எடுத்து நெம்பர் பிளேட்டை மாற்றுவோம் என்று சொன்னார். ஈச்சர் வண்டியில் ரகசிய அறைஅைத்து அதில் போலிமதுபானம் கொண்டு செல்வோம் என்றும், அழைத்துசென்றால் அதை காட்டுவதாக சொன்னார். வண்டிகளுக்கு போலி பதிவுபுத்தகம் தயார் செய்தவற்கு தேவையான போலிபுத்தகம், ஹொலோகிராம் ஸ்டிக்கர், லேபிள் வைத்திருப்பதாகவும், அலுமினிய பாட்டில் மூடி வைத்திருப்பதாகவும் அழைத்துசென்றால் எடுத்து தருவதாக சொன்னார். காலை 10.00 மணிக்கு அவரை பாஷா லேத்திற்கு அழைத்து சென்று இந்த

பொருட்களை கைப்பற்றினோம். மொத்தம் 23 அயிட்டங்கள் கைப்பற்றினோம். மதியம் 01.00மணிக்கு AR குவார்ட்டர்ஸில் இருந்த ஈச்சர் வண்டியில் இருந்த அந்த கம்பாட்மெண்டை காட்டினார். அதிலிருந்து 50 வெள்ளைநிற கேண்கள் எரிசாரயம் எடுத்தார்கள். அதன்பிறகு அந்த கேண்களில் இருந்து மாதிரியை பரிசோதனைக்கு எடுத்தார்கள். எதிரி சுரேஷ் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.20, என்னிடம் காட்டப்படும் லேத்தில் பொருட்கள் கைப்பற்றியதற்கான தயார் செய்த மகசரில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அந்த மகசர் அ.சா.ஆ.21, 50கேண்களை கைப்பற்றியதற்கான மகசர் அ.சா.ஆ.22, அதிலிருந்து மாதிரி எடுத்தற்கான மகசர் அ.சா.ஆ.23, இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

04.06.2015ம் தேதி யோகேஷ் (எ) சரவணனை போலிசார் கஷ்டடியில் எடுத்துவிசாரிக்க போவதாக சொல்லி வரசொன்னதின் அடிப்படையில் மதுவிலக்கு காவல்நிலையம் மாலை 05.00 மணிவாக்கில் சென்றோம். அங்கு மேற்படி யோகேஷ் (எ) சரவணன் தன்னுடைய சொந்த ஊர் திருவள்ளுர் மாவட்டத்தில் உள்ள திருத்தணி என்றும், சிறையில் இருக்கும்போது எதிரி சுரேஷிடம் பழக்கம்ஏற்பட்டு அவர் அழைத்ததின் பேரில் வாலிகண்டபுரம் வந்ததாக சொன்னார். மேற்படி யோகேஷ் (எ) சரவணன் செய்யாறில் உள்ள உமேஷ் என்பவரிம் சேர்ந்து போலி RC Book தயார் கொடுத்ததாகவும் அதற்கு ரூ.7000/- கொடுத்ததாகவும் சொன்னார். கடைசியாக போலியாக தயார் செய்த RC Bookஐ லேத்திற்கு கொடுக்க வந்தபோது போலிசார் வந்துவிட்டதால் தான் பக்கத்தில் உள்ள கருப்புசாமிகோவிலில் மறைத்துவைத்திருப்பதாகவும், தன்னை அழைத்துசென்றால் அதை எடுத்துதருவதாக சொன்னார். அதன்பின்னர் மாலை சுமார் 06.30 மணியளவில் அழைத்துசென்று கருப்புசாமிகோவிலில் அருகில் வைத்து ஆஜர் செய்த RC Bookஐ போலிசார் கைப்பற்றினார்கள். RC புத்தகம் மற்றும் படிவம் 47 மற்றும் தொடர்புடைய ஆவணங்களையும் கைப்பற்றினார்கள். எதிரி யோகேஷ் (எ) சரவணன் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தின்

அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.24, கைப்பற்றதல் மகசர் அ.சா.ஆ.25, இதுசம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள். அதுகுறித்து நானும், கிராமஉதவியாளரும் கையெழுத்து செய்தோம். மேற்படி கிராமஉதவியாளர் அன்பழகன் தற்போது இறந்துவிட்டார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கிராமநிர்வாக அலுவலகராக பணியில் இருந்தபோது அன்றாட பணிகளை டைரியில் எழுதுவேன். நான் முதல்விசாரணையில் சொன்ன 3நாட்கள் மதுவிலக்கு காவல்நிலையத்திற்கு சென்ற விவரம் குறித்து டைரியில் பதிவுசெய்தேன். அந்த டைரியை புலன்விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கும்போது கொடுக்கவில்லை. அ.சா.ஆ.19 ஆவணத்தில் லேத்தில் எந்த இடத்திலிருந்து ஓட்டுநர் உரிமங்கள் எடுத்துகொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆயுதப்படை பிரிவில் இருந்த வாகனத்தில் இருந்து எரிசாரயத்தை எடுத்தார்கள். கருப்புசாமிகோவிலில் எந்த இடத்திலிருந்து வழக்கு தடயம் எடுக்கப்பட்டது என்று மகசரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். லேத்தில் கைப்பற்றப்பட்ட 23 தடயங்களையும் எந்தெந்த பொருட்கள் எந்தெந்த இடங்களிலிருந்து எடுக்கப்பட்டது என்று மகசரில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்ன நாளில், நேரத்தில், விதத்தில் எதிரிகள் ஒப்புதல்வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் கையெழுத்து செய்துவிட்டு, தற்போது போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க புள்ளிவிவரத்திற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.